**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.49/2023

பெயர் :பிரகாசம் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 25.02.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் தந்தையின்சொத்துக்கான வழக்கு போட்டுள்ளேன். என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளேன் ன்பது தெரியவில்லைஎன்றால் சரிதான். என் வழக்குரையில் நத்தம் நில வரி திட்டத்தின் கீழ் தாவா சொத்து என் தந்தைக்கு கிடைத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பட்டா எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 1990 ல் கொடுத்ததாக என் தந்தை என்னிடம் கூறினார். இந்த விபரத்தை வழக்கில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டாவை நான் நேரில் பார்த்ததில்லை. தாவா சொத்தில் பிரதிவாதி எத்தனை ஆண்டுகளாக குடியிருக்கிறார் என்றால் 2017 ல் வீடு கட்டினார் சுமார் 9 வருடங்களான இருக்கிறார். என் தந்தைக்கு 3 பேர் வரிசுகள். நான் மற்றும் என் தம்பி, தங்கை. தம்பி பெயர் ராஜேந்திரன், தங்கை நீலாவதி. நான் வழக்கு போட்ட விபரம் என் தம்பி, தங்கைக்கு தெரியும். தாவா சொத்தில் ஓட்டுவீடு இருந்தது அது 2012 ல் இடிந்துவிட்டது. அதன் பின்னர் வீடு இடிந்த நிலையிலேயே இருந்தது. அசல் பட்டா என் தந்தைக்கு கொடுத்தது சேதமாகி விட்டது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி சுமார் 18 வருடங்களாக வீடு கட்டி குடியிருந்து வருகிறர் என்றால் சரியல்ல. நான் வெளியூரில் 36 வருடங்களாக வசிக்கிறேன் ஆனால் என் தந்தை மட்டும் இங்குதான் இருந்தார். 29.11.2007 ல் என் தந்தை இறந்தார். அதற்கு முன்பு செல்லம்மாளுக்கு 22.03.2005 ல் சாட்சிகள் முன்னிலையில் என் தந்தை பதிவு செய்த உயில் எழுதிவைத்துள்ளார் என்றாலும் அது தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றாலும் அது மோசடியான ஆவணம் என்றாலும் அதில் என் தம்பி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. உயிலில் ஆண் பிள்ளைகள் வெளியூரில் உள்ளதாலும் செல்லம் தன்னை நல்ல முறையில் கவனித்து கொள்வதால் அவருக்கு உயில் எழுதி வைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய்யானது. 2017 முதல் மாடி வீடு கட்டி பிரதிவாதி கட்டி குடியிருக்கிறார் என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். என்னிடம்

கண்பிக்கப்படும் வீட்டு வரி ரசீதுகள் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டது. தாவா சொத்துக்கான மின் கட்டண ரசீது பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் தான் மின் இணைப்பு உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் மின் இணைப்பு பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யயப்படுறது.** பழைய வீட்டிற்கு பிரதிவாதி பெயரில் இருந்தது தற்போது பிரதிவாதி பெயரில் வாங்கி இருக்கலாம். 2017 லேயே ஆக்கிமித்து வீடு கட்டியுள்ளார். என் தந்தைக்கு பிறந்த 3 வாரிசுகளில் நான் மட்டும் வச பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதி 2007 முதல் உயில் படி கிடைத்த சொத்தில் குடியிருந்து வந்து தற்போது மாடி வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் வச பரிகாரம் கேட்க இயலுாது என்றாலும் சரியல்ல. என் தந்தை எழுதி வைத்த உயில் என் தந்தை இறந்த 29.11.2007 அமலுக்கு வந்து பிரதிவாதி தாவா சொத்தை அடைந்துள்ளார் என்றால் சரியல்ல. 2017 ல் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்வது வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட விபரம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண். 136/2 388 ச.மீ 137/6 106 ச. மீ இரண்டு பாகங்களாக உள்ளது. நான்கெல்லை தெரியாது. பிரதிவாதிக்கு நோட்டிஸ் அனுப்பியது 2022. கட்டிடம் கட்டியுள்ளதால் என் சொத்து எனக்கு வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்தேன் நான் மட்டும் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். சீர்காழி சார் பதிவகத்தில் என்தந்தை, தம்பி ரராஜேந்திரன், சித்தப்பா சண்முகம் ஆகியோர்கள் முன்னிலையில் உயில் ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் நானும் என் தங்கையும் உள்ளபோது என் தம்பியிடம் மட்டும் கையெழுத்து வாங்க உள்ளார்கள் என் தம்பியின் கையெழுத்து பார்த்து ரொம்ப நாள் ஆகிறது அதில் ராஜேந்திரன் என்று உள்ளது. நாங்கள் எங்கள் தந்தையை பராமரிக்காமல் செல்லம்மாள் பராமரித்ததால் தான் என்தந்தை உயில் எழுதி வைத்து அதை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அதில் யாருக்கும் பின் தொடர்ச்சி இல்லை என்று உள்ளது என்றால் தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**